# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8074764

C

1. District : திருச்சி மாவட்டம் | PS: ஊ.த.க.பிரி, திருச்சி காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 06 மு.த.அ. எண் | Date: 26/10/2021 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act [as Amended in 2018] | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 25/10/21 | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.00 hrs | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26/10/21 | Time நேரம் : 09.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் வட்டாட்சியர் அலுவலகம் திருச்சி கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சுமார் 5 கி.மீ வடக்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.S. சீனிவாசன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. ராமசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1974 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் வியாபாரம், Building Promoter | (g) Address : முகவரி K.K. நகர், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. கோகுல், தனி வட்டாட்சியர், நகர நிலவரித்திட்டம், பொன்மலைபட்டி, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>**

திருச்சிராப்பள்ளி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், **26.10.2021** அன்று காலை சுமார் **09.30** மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி, கே.கே.நகர், இந்திராகாந்தி தெரு, பிளாட் எண்.**437/26** சேர்ந்த K.ராமசாமி மகன் K.R.சீனிவாசன் என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று, அந்த புகார் குறித்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள, திருச்சி பொன்மலைப்பகுதிக்கான செட்டில்மென்ட் தாசில்தாராக பணிபுரியும் திரு.கோகுல் மற்றும் புகார்தாரர் திரு.K.R.சீனிவாசன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி ரகசியமாக விசாரணை செய்ததில், புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி, புகார்தாரர் திரு. K.R.சீனிவாசனிடம் எதிரி திரு.கோகுல், கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் புகார்தாரரின், புகார்மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்ய, காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,

**(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.R.Srinivasan
26/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
26/10/2021
[A. PRASANNA VENKATESH]
Inspector of Police, VSAC, Trichy.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26/10/2021

Name: பெயர் ......................
Rank: நிலை ...................... No. எண் ..........

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2021–இன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......**

சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று 26.10.2021ஆம் தேதி, காலை 10.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2021 சட்டப் பிரிவு 7(a) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (as amended in 2018)–ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K.R.சீனிவாசன், வயது 46/2021, த/பெ K.ராமசாமி, பிளாட் எண்.437/26, இந்திராகாந்தி தெரு, கே.கே.நகர், திருச்சி–21. (செல்.9042192235) பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. அய்யா, நான், கே.கே நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். மேலும், கடந்த பத்து வருடங்களாக எனக்கு பூர்வீகமாக சுமார் 10 ஏக்கர் திருச்சியில் உள்ள இடங்களில் காலிமனைகளில் வீடுகட்டி விற்பனை செய்து வருகிறேன். திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு கிராம சர்வே எண்.150/2–ல் பட்டா எண்.200–ல் 1.11 ஏக்கர் நிலம் பூர்வீகமாக சொத்தாக எனது தாத்தா கருப்பண்ணன் அம்பலக்காரர் த/பெ ராமன் அம்பலக்காரர் பெயரில் இருந்தது. அதே கிராமத்தை சேர்ந்த அங்குராஜ் மற்றும் சன்னாசி வகையாறாக்கள் மேற்படி பூர்வீக சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து இடத்தினை விற்பனை செய்வதற்காக பொன்மலை பகுதிக்கான செட்டில்மெண்ட் தாசில்தாரிடம் மனு கொடுத்து நடவடிக்கை எடுப்பதாக கேள்விப்பட்டேன். எனவே, எனது அட்வகேட்டின் மூலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 11.10.2021 அன்று நோட்டீஸ் அனுப்பி வைத்தேன். அதற்கு பிறகு அந்த நோட்டீஸ் தொடர்பாக செட்டில்மெண்ட் சர்வேயர் திருமதி.பூமாதேவி அவர்கள் அங்குராஜ் வகையறாவிற்கு சாதகமாக செய்யவிருப்பதாக கேள்விப்பட்டு சர்வேயர் பூமாதேவியை சந்தித்து விபரம் கேட்ட போது, சர்வேயர் பூமாதேவி உங்க மனு சம்மந்தமாக என்ன வந்து பார்க்க வேணாம், உங்க மனுவை செட்டில்மென்ட் தாசில்தாருக்கு அனுப்பிவிட்டேன். இனிமே எதுவானாலும் அவரை போய் பார்த்து கொள்ளுங்கள் என்று கோபமாக சொன்னதால் நான் வந்துவிட்டேன். மேலும், அங்குராஜ் வகையறாவின் நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு சுமார் பத்து நாட்களுக்கு முன்பு மேற்படி பொன்மலை பகுதிக்கான செட்டில்மென்ட் தாசில்தார் திரு.கோகுல் அவர்களை அவரது அலுவலகமான வட்டாட்சியர் திருச்சி மேற்கு அலுகலகத்தின் மாடியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது மனு மற்றும் எனது தாத்தா பெயர்களில் உள்ள சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து கொடுத்தேன். எனது மனுவினை பெற்று கொண்ட தனித்தாசில்தார் கோகுல் அவர்கள் எனது மனுவினை படித்து பார்த்துவிட்டு, இந்த இடம் சம்மந்தமாக அங்குராஜ் வகையறாக்களும் மனு கொடுத்துள்ளதால் field visit பார்த்துவிட்டு

உங்களை கூப்பிடுகிறேன் என்று என்னிடம் சொன்னார். பிறகு 21.10.21 அன்று தனித்தாசில்தார் கோகுல் எனது இடத்தினை பார்வையிட்டு நாளைக்கு கூப்பிடுகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் எப்ப சார் உங்களை வந்து பார்க்கட்டும் என்று கேட்டதற்கு அவர், நீங்க எப்ப வேணும்னாலும் சாயங்காலம் 6 மணிக்கு மேல் வந்து என்னை பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அதன்பிறகு எனக்கு தாசில்தாரிடமிருந்து எந்த தகவலும் வராததால் நான் நேற்று 25.10.21 மாலை சுமார் 6 மணியளவில் தனிதாசில்தார் கோகுலை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது மனு தொடர்பாக கேட்டேன். அதற்கு தாசில்தார் கோகுல் அவர்கள் என்னிடம், உங்க மனு சம்மந்தமாக அங்குராஜ் வகையறாவும் பட்டா கேட்டு மனு கொடுத்திருக்காங்க, அவர்களின் மனு மீது நடவடிக்கை எதுவும் எடுக்காம நிறுத்தி வைச்சிடுறேன். உங்க இடத்தோட ஒர்த்தும் அதிகமாக இருக்கு அதனால அதற்கு தகுந்தாற்போல் என்னை கவனிச்சிங்கின்னா உங்களுக்கு ஃபேவரா என்னால என்ன செய்ய முடியுமோ அத நான் செஞ்சி கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார் உங்களுக்கு செய்யணும் என்று கேட்டேன். அதற்கு அவர் இரண்டரை லட்சம் கொடுத்தீங்கனா உங்களுக்கு சாதகமான வேலைகளை செஞ்சி கொடுக்கிறேன் என்று சொன்னர். என்ன சார் இவ்வளவு கேக்கிறீங்களே என்று சொன்னேன். அதற்கு அவர் உங்க இடத்தோட ஒர்த்து அதிகமேப்பா என்று சொன்னார். அதற்கு ரெண்டு மூனு இட விஷயமா உங்ககிட்டதான் சார் நான் வரணும், அதனால இப்ப உங்க அமௌன்ட்ட கம்மியா கேளுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் ஐம்பத குறைச்சிகிட்டு ரெண்டு லட்சம் கொடுத்திடுங்க, நாளைக்கு 6 மணிக்கு வந்து 50 ஆயிரம் அட்வான்சா கொடுத்திடுங்க மீதியை இரண்டு நாள்ல கொடுங்க என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார் நாளைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட பொன்மலை பகுதிக்கான செட்டில்மென்ட் தாசில்தார் திரு.கோகுல் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு(sd)K.R.சீனிவாசன். 26/10/21. Sir, Submitted to the Court of the Hon'ble Spl Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Thiruchirappalli. Received the report at 09.30 hrs on 26.10.2021 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.06/2021 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 10.00 hrs on 26.10.2021. (Sd)A.Prasanna Venkatesh, 26.10.2021, Inspector of Police, V&AC, Trichy.

26/10/2021
[A. PRASANNA VENKATESH]
Inspector of Police,
V&AC, Trichy.